திராவிட மாடல் ஆட்சியில்

மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்கள்

திமுக சார்பில் சாதனை பட்டியல் வெளியீடு

சென்னை, ஏப்.16: திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக திமுக சார்பில் சாதனை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அச்சாதனைகளின் சில அம்சங்கள்:

■ இலங்கை கடற்படை கைப்பற்றி சேதமடைந்த 180 விசைப்படகுகளுக்கும், 25 நாட்டுப்படகுகளுக்கும் ரூ.12.76 கோடி நிவாரணம் முதல்வர் வழங்கியுள்ளார். மீன் பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர் குடும்பத்திற்கு தினமும் வழங்கப்படும் இழப்பீடு ரூ.250-ஐ ரூ.500 என உயர்த்தியுள்ளார்.

■ மீன்பிடி தடைக்கால நிவாரணம் ரூ.5,000 என்பதை ரூ.8,000 ஆக உயர்த்தியுள்ளார். இதனால் 8,76,032 மீனவ குடும்பங்கள் பயன் அடைவார்கள். மீன்பிடி குறைவு கால நிவாரணம் ரூ.5,000 என்பதை ரூ.6,000 ஆக உயர்த்தியுள்ளார். இதனால் 9,13,394 மீனவ குடும்பங்கள் பயனடைவார்கள். கடல் மீனவர் சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ.304.61 கோடி நிவாரணம், இதனால் 10,17,226 மீனவர்கள் பயனடைவர். கடல் மீனவ மகளிர் சேமிப்பு திட்டத்தில் ரூ.301.02 கோடி நிவாரணம். இதனால் 10,05,390 மீனவ மகளிர் பயன்பெறுவர்.

■ கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் தின உதவித்தொகை ரூ.250 என்பது ரூ.350 ஆக உயர்த்தப்பட்டு ஒரு மீனவ குடும்பத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.10,500 வீதம் வழங்கப்படுகிறது. இந்த தின உதவித்தொகை ரூ.350 என்பது ரூ.500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என முதல்வர் மு.ஸ்டாலின் அறிவித்தபடி, 2025-2026ம் ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படுகிறது.

■ 1.6.2020 முதல் 18.10.2021 வரை மீனவர் காப்பீடு இல்லாத காலத்தில் மீன் பிடிக்கச்சென்று உயிர் இழந்த 205 மீனவர் குடும்பங்களுக்கு விபத்து காப்பீடு நிவாரணத் தொகை தலா ரூ.2 லட்சம் வீதம் மொத்தம் ரூ.4.10 கோடி வழங்கப்பட்டுள்ளது. நிரந்தர ஊனமடைந்த ஒரு மீனவருக்கு ரூ.1 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

■ 5.12.2023 அன்று எண்ணூர் கொசஸ்தலை ஆற்றில் கச்சா எண்ணெய் கலந்ததால் எண்ணூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மீனவ கிராமங்களை சேர்ந்த மீனவர்களின் சேதமடைந்த படகுகள், வலைகளுக்காக ரூ3.66 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

■ 4.12.2023 அன்று மிக்ஜாம் புயல் காரணமாக சென்னை, காஞ்சி, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட மீனவர்களின் படகுகள் முதலியவற்றிற்கான வாடகை கட்டணம்; பணியில் ஈடுபட்டிருந்த மீனவர்களுக்கு செலவினம் என ரூ.1.70 கோடி வழங்கப்பட்டதுடன்; சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்காகவும் ரூ.12.88 கோடி நிவாரணம் வழங்கப்பட்டது.

■ 15.12.2023 முதல் 17.12.2023 வரை தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்த மழை வெள்ளத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக ஈடுபடுத்தப்பட்ட படகுகள் முதலியவற்றிற்கு ரூ.99 லட்சமும், சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்காக ரூ.14.53 கோடியும் நிவாரணமாக வழங்கப்பட்டது.

■ 2024ம் ஆண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் பெஞ்சல் புயலின்போது மீட்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட 300 படகுகள் மற்றும் 648 மீனவர்களுக்கு செலவினம் ரூ.90 லட்சமும், சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு ரூ.2.537 கோடி இழப்பீட்டும் வழங்கப்பட்டது.

■ தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் விபத்தில் இறந்த மீனவருக்கு தலா ரூ.5 லட்சமும், விபத்தில் ஊனமடைந்த மீனவருக்கு ரூ.2.50 லட்சமும், காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மீனவருக்கு ரூ.25 ஆயிரம் வீதமும் வழங்கப்படும் நிவாரணத்தின்படி; 2021 முதல் 4 ஆண்டுகளில் மாநில அரசின் 40 சதவீதத் தொகையாக ரூ.6.82 கோடி வழங்கப்பட்டுள்ளது.

■ மீனவர் குழு விபத்து காப்புறுதி திட்டத்தின் கீழ் 2021 முதல் இதுவரை மீன்பிடிக்கச் சென்று விபத்தில் இறந்த மற்றும் காயமடைந்த 482 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.23.31 கோடி காப்புறுதி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

■ மீன்பிடி தடைக்கால நிவாரணத்தொகை ரூ.5 ஆயிரம் என்பது ரூ.8 ஆயிரமாக உயர்த்தப்பட்டு 8,76,032 மீனவ குடும்பங்களுக்கு ரூ.545.83 கோடி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

■ 2022-2023ம் ஆண்டு முதல் திராவிட மாடல் அரசின் திட்டமாக செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் 10,17,226 மீனவர்களுக்கு ரூ.304.61 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

■ 2021-2022ம் ஆண்டு முதல், இத்திட்டத்தின் கீழ் 10,05,390 மீனவ மகளிருக்கு ரூ.301.02 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

■ பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டம் கீழ் 3,591 பேர் 40 சதவீத மானியத்தில் மொத்தம் ரூ.21.6 கோடி மதிப்பில் உள்பொருத்தும், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

■ பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு 75 விழுக்காடு மானியத்தில் ரூ.4.49 கோடியில் 40 ஆயிரம் உயிர்க்காப்பு சட்டைகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

■ தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரங்களை திரவ எரிவாயு மூலம் இயங்கும் இயந்திரங்களாக மாற்றும் திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 175 மண்ணெண்ணெய் இயந்திரங்களை ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் மாற்றம் செய்திட அனுமதிக்கப்பட்டு மீனவப் பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

■ 7 கடலோர மாவட்டங்களில் ரூ.742.96 கோடியில் மீன்பிடி இறங்கு தளங்கள், தூண்டில் வளைவுகள், கடலரிப்பை தடுக்கும் அமைப்புகள் ஆகியவை 44 இடங்களில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

■ கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினம் மீன்பிடி துறைமுகம் அலைத் தடுப்பு சுவர் நீட்டிப்பு பணி ரூ.116 கோடி செலவில் நடைபெற்று வருகிறது.

■ புதிய மீன்பண்ணை கட்டுமானம், புனரமைத்தல், நவீனமயமாக்கம் பணிகள் ரூ.60.20 கோடி மதிப்பில் நடைபெற்று வருகின்றன.

■ தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அணையில் பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடம் கட்டும் பணி ரூ.8 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

■ நெல்லை மாவட்டத்தில் வண்ண மீன் காட்சியகம் மற்றும் வண்ண மீன் சில்லரை விற்பனையகம் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

■ திருவள்ளூர், விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் 13 கிராமங்களில் ரூ.56 கோடி செலவில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

■ இளநிலை பட்டப்படிப்புகளில் மீனவ சமுதாயத்தை சேர்ந்த 250 மாணவிகளுக்கு புதுமைப் பெண் திட்டத்தின் கீழும், அதேபோல 143 மாணவர்கள் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழும் மாதம் ரூ.1000 பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

பறக்கும் படையினர் சோதனை

▶ சட்டமன்ற தேர்தலையொட்டி வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில், பறக்கும் படையினர், துணை ராணுவத்தினருடன் இணைந்து, தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இடம்: தி.நகர் வெங்கட் நாராயணா சாலை.

ஜனநாயகன் படம் இணையத்தில் கசிந்த விவகாரம்

தயாரிப்பு நிறுவனம் நீதிமன்றத்தில் முறையீடு

சென்னை, ஏப்.16: ஜனநாயகன் படம் இணையதளத்தில் கசிந்த விவகாரம் தொடர்பாக தயாரிப்பு நிறுவனம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் அவசர முறையீடு செய்யப்பட்டுள்ளது.

நடிகர் விஜய் தனது கடைசி படம் என்று அறிவித்து நடித்துள்ள ஜனநாயகன் படம் பொங்கலுக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், படத்தில் ராணுவம் சார்ந்த விஷயங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், மத நல்லிணக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் வகையில் காட்சிகள் இடம் பெற்றுள்ளதாகவும் கூறி படத்தை மறு ஆய்வு குழுவுக்கு அனுப்பி சென்சார் போர்டு உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த தனி நீதிபதி, உடனடியாக படத்துக்கு சான்று வழங்க சென்சார் போர்டுக்கு உத்தரவிட்டிருந்தார். இந்த உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு மனுவை விசாரித்த இரு நீதிபதிகள் அமர்வு, படத்துக்கு உடனடியாக சான்று வழங்குமாறு தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து வழக்கை மீண்டும் விசாரிக்க தனி நீதிபதிக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், படத்தை மறு ஆய்வுக்கு அனுப்பிய பட தயாரிப்பு நிறுவனம், தனி நீதிபதி முன்பு நிலுவையில் இருந்த வழக்கை திரும்ப பெற்றது. சென்சார் போர்டின் மறு ஆய்வு குழு ஆய்வில் படம் இருந்தது. இந்நிலையில், சமீபத்தில் ஜனநாயகன் படம் இணையதளத்தில் வெளியானது. இந்த விவகாரம் தொடர்பாக பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தி முன்பு நேற்று முறையீடு செய்யப்பட்டது.

முறையீட்டை கேட்ட நீதிபதி, இதுசம்பந்தமாக மனு தாக்கல் செய்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

உடைமை அறிவிப்பு
(அசையா சொத்துக்காக)

அவ்வாறிருக்கையில்,

கீழே கையொப்பமிடப்பட்டுள்ள **சம்மான் கேபிடல் லிட் (CIN:L65922DL2005PLC136029)**(இப்போது **இந்தியாபுல் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்** என்று அழைக்கப்படுகிறது) அங்கீகாரம் பெற்ற அதிகாரி செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்ஸியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் ஆக்ட், சட்டம் 2002 கீழ் மற்றும் பிரிவு 13(12) விதி 3, கீழ் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் என்ஃபோர்ஸ்மென்ட் விதி, 2002 உடன் வாசிக்கப்பட்டு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நடைமுறைப்படி **18.06.2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பு வழங்கியுள்ளது. அந்த அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் உண்மையாக பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி **17.06.2025**-ம் தேதியின்படி அதற்கான வட்டியுடன் கடன் கணக்கு எண்: **HHLPOR00414137** கொண்ட, அறிவிப்பில் குறிப்பிட்ட **ரூ. 20,08,026.34 (ரூபாய் இருபது லட்சத்து எட்டு ஆயிரத்து இருபத்து ஆறு மற்றும் முப்பத்து நான்கு பைசா மட்டும்)** தொகையினை கடனாளிகள் **ராஜேஷ் ஆர் என்ற ஆர் ராஜேஷ் மற்றும் சௌமியா ஆர் என்ற ஆர் சௌமியா** செலுத்த வேண்டும்.

கடனாளிகள் தொகையை திருப்பிச் செலுத்த தவறியதால் கடனாளி மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படும் அறிவிப்பு என்னவென்றால் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் (என்ஃபோர்ஸ்மென்ட்) விதிகள் 2002 சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4) கீழ் விதி 8 உடன் கீழே கையொப்பமிட்டவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நடைமுறைப்படி **10.04.2026** அன்று கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் **அடையாள உடைமையை** எடுத்துக் கொண்டுள்ளார் என்பதாகும்.

கடன் பெற்றவரும், குறிப்பாக பொதுமக்களும் இந்தச் சொத்துடன் எந்த ஒப்பந்தமும் செய்யக் கூடாது என்று எச்சரிக்கப்படுகிறது இந்தச் சொத்தை வாங்குபவர்கள் மற்றும் இந்தச் சொத்துடன் செய்யப்படும் ஏதாவது நடவடிக்கை, உண்மையாகப் பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி **17.06.2025** தேதியின்படி அதற்கான வட்டியுடன் **ரூ. 20,08,026.34 (ரூபாய் இருபது லட்சத்து எட்டு ஆயிரத்து இருபத்து ஆறு மற்றும் முப்பத்து நான்கு பைசா மட்டும்) சம்மான் கேபிடல் லிட்** (இப்போது **இந்தியபுல்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்** என்று அழைக்கப்படுகிறது) க்குச் செலுத்த வேண்டும்.

எடுக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுப் பெற கிடைக்கும் காலத்தைப் பொறுத்த வரை சட்டத்தின் 13வது பகுதியின் துணைப் பிரிவின் (8) விதிமுறைகளை கடன் பெற்றவர் கவனிக்க வேண்டும்.

அசையாச் சொத்தின் விவரம்

அலகு எண் ஜி -15, தொகுதி-1, தரைத்தளம்; 424 சதுர அடி கார்பெட் பரப்பளவைக் கொண்டது (சூப்பர் பில்ட்-அப் பரப்பளவு 595 சதுர அடி) — இது அடித்தளப் பரப்பளவு மற்றும் குறிப்பிட்ட திட்டத்தின் பொதுப் பரப்பளவின் விகிதாசாரப் பங்கின் கூட்டுத்தொகையாகும். இத்திட்டம் ''ஹோம்ஸ் மஞ்சுரி'' என்று அழைக்கப்படுகிறது மற்றும் இது காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, மேவலூர்குப்பம் கிராமத்தில் அமைந்துள்ளது. இத்திட்டம் பின்வரும் சர்வே எண்களைக் கொண்ட நிலத்தில் அமைந்துள்ளது: 229/8 பி, 11 அ 2, 230/8, 9 அ 1, 9 பி, 9 சி, 9 டி, 9 இ, 9 எஃப், 9 ஜி, 9 எச், 12 பிபிடி.; முகவரி: மேவலூர்குப்பம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் - 602105, தமிழ்நாடு. மேலும், குறிப்பிடப்பட்ட சொத்தில் 332.5 சதுர அடி பரப்பளவுள்ள பிரிக்கப்படாத நிலப்பகுதியும் அடங்கும்.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
சம்மான் கேபிடல் லிட்
(முன்னதாக இந்தியாபுல்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

தேதி: 10.04.2026
இடம்: காஞ்சிபுரம்

தொகுதி மறுவரையறைக்கு எதிராக போராட்டம்

கருப்பு உடை அணிந்து எதிர்ப்பு

கூட்டணி கட்சி தலைவர்கள் வலியுறுத்தல்

சென்னை, ஏப்.16: தொகுதி மறுவரையறைக்கு எதிராக தமிழ்நாடு முழுவதும் இன்று கருப்பு கொடி போராட்டம் நடைபெற உள்ள நிலையில், கருப்பு உடை அணிந்தும் எதிர்ப்பை அறவழியில் தெரிவிக்க திமுக கூட்டணி கட்சி தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்): தமிழ்நாடு உள்ளிட்ட தென்னிந்திய மாநிலங்களுக்கு அரசியல் தண்டனை வழங்கும் முயற்சியாக தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கை உருவெடுத்துள்ளது. அநியாயமான, ஆதிக்க நோக்கமுடைய நடவடிக்கைகளுக்கு எதிராக, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இன்று மாநிலம் முழுவதும் வலுவான ஜனநாயக எதிர்ப்பை போராட்டமாக அறிவிக்கிறது. காங்கிரஸ் தொண்டர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட பொதுமக்கள் அனைவரும் தங்களது வீடுகளில் கருப்பு கொடி ஏந்தியும், கருப்பு உடை அணிந்தும், இந்த அரசியல் அநியாயத்திற்கு எதிராக தங்களது கண்டனத்தை வெளிப்படுத்த வேண்டும்.

வைகோ (மதிமுக): 2047ம் ஆண்டுக்குள் இந்து ராஷ்டிரத்தை அமைக்க வேண்டும் என்று ஒன்றிய பாஜ செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், வருங்காலத்தில் தங்களுடைய பாசிச திட்டங்களை வடமாநில எம்.பி.க்களின் ஆதரவுடன் மட்டும் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்ற நிலைமையை உருவாக்க முனைகிறது பாஜ அரசு. இச்சூழலில் இன்று நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை கூட்டி தொகுதி வரையறை மேற்கொள்ள அரசியல் சட்ட திருத்தம் கொண்டு வர பாஜ அரசு துடிக்கிறது. தொகுதி மறுவரையறை சட்டத்திற்கு எதிராக தமிழ்நாட்டு மக்கள் கிளர்ந்து எழுந்து மிகப் பெரிய போராட்டத்தைக் கட்டமைக்க வேண்டிய தேவையை மோடி அரசு உருவாக்கி உள்ளது. அதன்படி, தொகுதி மறுவரையறை சட்ட திருத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கருப்பு உடை அணிந்தும், தங்கள் வீடுகளில் கருப்பு கொடி உயர்த்தியும் தங்கள் எதிர்ப்பை அறவழியில் தெரிவிக்க வேண்டும்.

மு.வீரபாண்டியன் (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி): தமிழ்நாட்டையும், தென்னிந்திய மாநிலங்களையும் பாதிக்கும் வகையில், அம்மாநிலங்கள் அரசியல் வலிமையை இழக்கும் வகையில், ஒன்றிய பாஜ அரசு, அவசர கோலத்தில், தொகுதி மறுவரையறையை கொண்டுவருவதற்காக நாடாளுமன்றத்தில் இன்று அவசர சட்டத்திருத்தத்தை செய்ய உள்ளது. அதற்கு எதிராக திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் கருப்புக்கொடிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போராட்டத்தை ஆதரித்து வரவேற்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தக் கருப்புக் கொடி போராட்டத்தில் பங்கேற்கும். தமிழ்நாட்டின் குரல் வளையை நெரிக்க நினைக்கும் ஒன்றிய பாஜ அரசுக்கு எதிராக, தமிழ்நாட்டில் இருக்கும் ஒவ்வொரு குடும்பமும் தங்கள் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

பெ.சண்முகம் (மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி): பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவது என்ற போர்வையில் நாடாளுமன்ற தொகுதி மறுவரையறைக்கான சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற ஒன்றிய பாஜ அரசு இன்று நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை நடத்திட உள்ளது. தேர்தல் பணிகள் பாதிக்கப்படும் வகையில் அவசரமாக நாடாளுமன்ற கூட்டத்தை நடத்த வேண்டிய எந்த அவசியமுமில்லை.

எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளை ஏற்காமல் தன்னிச்சையாக பாஜ அரசு செயல்படுவது கண்டிக்கத்தக்கது. தற்போது பெண்களுக்கு இட ஒதுக்கீடு என்பதை பயன்படுத்தி கொல்லைப்புற வழியாக அவர்கள் நினைத்த அடிப்படையில் தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் கொண்டுவர மோடி அரசு முயற்சிக்கிறது. எனவே, தமிழ்நாட்டிற்கு விரோதமான ஒன்றிய பாஜ அரசின் நடவடிக்கைக்கு நமது கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும், தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாக்கவும் இன்று வீடுகளில் கருப்புக்கொடி ஏற்றியும், மக்கள் கருப்பு சட்டை அணிந்தும் கண்டனத்தை வெளிப்படுத்த கேட்டுக் கொள்கிறேன்.

முகம்மது முபாரக் (எஸ்டிபிஐ கட்சி மாநில தலைவர்): தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களைத் தண்டிக்கும் நோக்கில், ஒன்றிய பாஜ அரசு கொண்டுவரத் துடிக்கும் தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தம் ஒரு வரலாற்று அநீதியாகும். ஒன்றிய பாஜ அரசின் சதிக்கு எதிராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ள போராட்டமானது வெறும் அரசியல் சார்ந்தது மட்டுமல்ல; இது தமிழர்களின் சுயமரியாதை மற்றும் அரசியல் உரிமைகளைத் தற்காப்பதற்கான போராட்டம். இதற்கு எஸ்டிபிஐ கட்சி தனது முழுமையான ஆதரவைத் தெரிவிப்பதோடு, மாநிலம் தழுவிய அளவில் இதில் தீவிரமாகப் பங்கேற்கும்.

பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் Piramal Capital and Housing Finance Limited)
கல்பாலதிகா டவர்ஸ், பழைய எண்.24, புதிய எண். 36, 3வது தளம், அம்பேத்கர் சாலை, அசோக் நகர் மெயின் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600 024. Mail: Vikram.Natarajan@pfss.in

பிற்சேர்க்கை - IV - சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

இந்த அறிவிப்பின் மூலம், பிரமல் பைனான்ஸ் லிமிடெட் முன்னர் பிரமல் கேபிடல் மற்றும் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் இன் அதிகாரம்பெற்ற அதிகாரியால் பிணைக்காப்பு நிதிச்சொத்துக்கள் மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு அமலாக்க விதிகள் 2002ன் கீழ் பிரிவு 13(12) விதி 3 இன்படி கீழே குறிப்பிட்ட கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) ஆகியோர்களுக்கு கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கடன் நிலுவைத் தொகைகள் அதன் மீதான மொத்தத் தொகையினையும் செலுத்தும் தேதிவரையிலான ஒப்பந்த அடிப்படையிலான வட்டி, செலவீனங்கள், கட்டணங்கள் போன்ற பிறவற்றை சேர்த்து செலுத்துமாறு அறிவிப்பு பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது. கடன்தாரர்களுக்குச் சொந்தமான நிதிச் சொத்துக்களை, அதற்காக உருவாக்கப்பட்ட அடிப்படை பாதுகாப்பு வட்டியுடன், மேற்படி கடன்தாரர் பாக்கித் தொகையை செலுத்தத் தவறியபடியால் பொதுமக்களுக்கும், கடன்தாரர்/ ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது, மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8ல் தமக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர், குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். எனவே கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் யாரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது, மீறி வைத்துக் கொண்டால் அது PCHF செலுத்த வேண்டிய பாக்கித் தொகை, வட்டி மற்றும் செலவினங்களையும் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். **கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துக்களை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.**

வ. எண்	கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர்கள்	கேட்பு அறிவிப்பு தேதி மற்றும் தொகை	சுவாதீனம் எடுத்த தேதி
1.	கடன் எண் (HLSA00060259 & SCUBL00551D0) (கடன்தாரர்) யோகஆனந்த் சசிகலா (இணை கடன்தாரர் 1) யோகஆனந்த்.S	16-01-2026 ரூ. 48,13,125.00/-	10-04-2026
	பிணை சொத்தின் விளக்கம் (அசையா சொத்து): சென்னை மாவட்டம், மாதவரம் வட்டம், புழல் கிராமத்தின் பழைய சர்வே எண்.250, பட்டா எண்.1995 இன்படி புதிய சர்வே எண்.250/11, பழைய பட்டா எண்.16635, தற்போது பட்டா எண்.18619 இன்படி தற்போது சர்வே எண்.250/11B இல் அடங்கிய ஸ்ரீ பாலாஜி நகர் பகுதி 3A, மனை எண்.9 இன் பரப்பளவு 1196சதுர அடியின் வடபுற பாகத்தில் பிரிக்கப்படாத பங்கு 355சதுர அடி நிலம் அதனுடன் பொதுப்பரப்பு உட்பட Rockfort Pillars என்ற பெயரில் கட்டப்பட்டுள்ள திட்டத்தில் முதல் தளத்தில் பரப்பளவு 786சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட குடியிருப்பு ஃப்ளாட் எண்.F1, நிலத்தின் எல்லைகள்: கிழக்கில்- 24அடி சாலை, மேற்கில்- மனை எண்.18, வடக்கில்- மனை எண்:8, தெற்கில்- மனை எண்.9 இன் எஞ்சியுள்ள பாகம்.		
2.	கடன் எண் (BLSA000395B4 & XBLBSLIV00076E7) (கடன்தாரர்) தனசேகர். V (இணை கடன்தாரர் 1) ஆனந்தி	16-01-2026 ரூ.24,12,452.00/-	10-04-2026
	பிணைச் சொத்தின் விளக்கம் (அசையா சொத்து): காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், கூவத்தூர் ஊராட்சி, எண்.103, துவத்தூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.693/1, பட்டா எண்.858 இன்படி புதிய சர்வே எண்கள். 802/17& 802/8 ஆகியவைகளில் அடங்கிய பரப்பளவு 2179சதுர அடியில் 825சதுர அடி விஸ்தீரணங்கொண்ட சொத்து நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: கிழக்கில்- திரு. ஜெயராமன் அவர்களின் உரிமைப்பெற்ற காலி நிலம், மேற்கில்- சாலை, வடக்கில்- திருமதி. கலா அவர்களின் உரிமைப்பெற்ற காலி நிலம், தெற்கில்- திருமதி. கலா மற்றும் திரு. இராஜேந்திரா அவர்களின் உரிமைப்பெற்ற எஞ்சியுள்ள காலி நிலம்.		
3.	கடன் எண் (HLSA000BF845) (கடன்தாரர்) முகமது அஷ்ஃபாக், (இணை கடன்தாரர் 1) ஃபரிஹா தஸீன்	16-01-2026 ரூ.31,13,039.00/-	10-04-2026
	பிணைச் சொத்தின் விளக்கம் (அசையா சொத்து): வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வில்லிவாக்கம் சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல் வட்டம், நொளம்பூர் கிராமத்தின் பழைய சர்வே எண்.162/1 பகுதி, பட்டா எண்.84 இன்படி புதிய சர்வே எண்.162/6 இல் அடங்கிய யூனியன் சாலை, கதவு எண்.6 இல் அமைந்துள்ள கூட்டுப்பரப்பளவு 400சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி. கிழக்கில்- கால்வாய், T.சர்வே எண்.162/21, மேற்கில்- திரு. இரகு அவர்களின் உரிமைப்பெற்ற மனை எண் மற்றும் 3அடி பொதுப் பாதை, வடக்கில்- திரு. இராஜி மற்றும் திருமதி. செல்வி அவர்களின் உரிமைப்பெற்ற மனை, T. சர்வே எண்.162/15, தெற்கில்- திரு. இரகு அவர்களின் உரிமைப்பெற்ற மனை, T. சர்வே எண்.162/17.		
4.	கடன் எண் (15600000244) (கடன்தாரர்) அருண் குமார். R (இணை கடன்தாரர் 1) சுகன்யா அருண்	16-01-2026 ரூ.25,54,495.00/-	13-04-2026
	பிணைச் சொத்தின் விளக்கம் (அசையா சொத்து): தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் படப்பை சார்பதிவு மாவட்டத்தின் SRO-விற்குட்பட்ட எண். 348/1C, பட்டா எண்.2860 இன்படி புதிய சர்வே எண்.348/1C1B இல் அடங்கிய காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், முடிச்சூர் கிராமத்தின், மனை எண்.C1 இன் பரப்பளவு 2425சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 433சதுர அடி அல்லது 40.24சதுர மீட்டர் விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனுடன் அதில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் 837சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண்.F-1 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: கிழக்கில்- 20அடி சாலை, மேற்கில்- திரு. சந்திரசேகரன் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம், வடக்கில்- மனை எண்.C2-73 அடி 1 அங்குலம், தெற்கில்- திரு. நடேச நாயக்கர் அவர்களின் உரிமைப்பெற்ற சர்வே எண்.343.		
5.	கடன் எண் (17000000555) (கடன்தாரர்) முத்தமிழ். R (இணை கடன்தாரர் 1) ஜெயஸ்ரீ. M	17-08-2024 ரூ.56,29,426.00/	15-04-2026
	பிணைச் சொத்தின் விளக்கம் (அசையா சொத்து): திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், திருமுல்லைவாயல் கிராமத்தின் சர்வே எண்.299/1 & 299/3 பகுதி மற்றும் T.சர்வே எண்.4/5 பகுதி & T. சர்வே பகுதி இல் அடங்கிய பிளாக் எண்.5, வார்டு-D, 'Shyams Rivieraa' மனை எண்.1 இன் பரப்பளவு 2518 சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 568சதுர அடி நிலம் அதனுடன் 1414 சதுர அடி பாதையில் பிரிக்கப்படாத பங்கு 99சதுர அடி நிலம், அதனுடன் ஒரு மூடிய கார் நிறுத்தும் இடம், பிளாக் எண்.9 (Pearl) இரண்டாத் தளத்தில் 933 சதுர அடி கட்டிடப்பரப்புடன் இரு படுக்கையறை கொண்ட ஃப்ளாட் எண்.S-1, நிலம் மற்றும் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்- 12அடி அகல பாதை, தெற்கில்- T. சர்வே எண்.4/9 இல் உள்ள திரு. டென்னிஸ் குமார் என்கிற டென்னிஸ் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம், கிழக்கில்- 0 - பிளாக், மனை எண்.2, மேற்கில்- பிளாக்- 30- 0 அகல சாலை, கிழக்கில்- 20அடி சாலை, மேற்கில்- திரு. சந்திரசேகர் அவர்களின் உரிமைப்பெற்ற நிலம், வடக்கில்- மனை எண்.C2-73 அடி 1 அங்குலம், தெற்கில் - திரு. நடேச நாயக்கர் அவர்களின் உரிமைப்பெற்ற சர்வே எண்.343.		

தேதி: 15-04-2026; இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அலுவலர், பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.
CIN: U67100TZ2014PTC020363
காா்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் ஸ்கொயர், 47வது தளம், N.C. கேல்கர்மார்க் R.G.கட்காரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை-400028.
பதிவு அலுவலக முகவரி: எண்.9, எம்.பி. நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்-641607
மின்னஞ்சல்:vm.divakaran@omkaraarc.com,
அதிகாரபூர்வ அதிகாரி: கைபேசி எண்.: +91 9344684194/ 9884062068/ 99623 33307.

[பிற்சேர்க்கை-IV-A] [விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்து மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w 9(1) விதிகளுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (''சர்பாசி சட்டம்'') கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்கீழ் பெயரிடப்பட்ட கீழ்க்குறிப்பிட்ட கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்கள் ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, அது ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (OARPL), மேலும் கீழே உள்ள கணக்குகளின் முழு நிலுவையில் உள்ள கடன்களையும் ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (OARPL) (ஓம்காரா PS 06/2021-22 ட்ரஸ்ட் ஒப்பந்தங்கள் மூலம் பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படும்) இண்டஸ்இண்ட் பேங் லிமிடெட் (உரிமையீந்தோர் வங்கி) வசமிருந்து 25.06.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையீந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஓஏஆர்பிஎல் உரிமையீந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஓஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப-கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஓஏஆர்பிஎல்-க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக ''உள்ளது உள்ளவிடத்தில்'', ''உள்ளது உள்ளவாறு'', மேலும் ''உள்ளது எதுவோ அது'' மற்றும் ''முறையீடுசாரா அடிப்படை''யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

வ. எண்	கடன்தாரர் / உப கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13(2) இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு /கையக சுவாதீன தேதி	சொத்தின் உரிமையாளர்	கடனீட்டு சொத்து விவரங்கள்:	சொத்தின் தன்மை	15.04.2026 தேதியின்படி நிலுவை:	நிர்ணய விலை/ ஏலம் உயர்த்தும் தொகை	நிர்ணய விலையில் 10% முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் தேதி மற்றும் நேரம்
தொகுதி 1	M/s. ஹார்ட் சிப்ஸ் எண்டர்பிரைசஸ்/ திரு.V.பிரகதீஷ் /திருமதி. வாசுதேவன் பொன்முடி 13(2) இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி 20.04.2022 கையக சுவாதீனம் தேதி 10.02.2026	திரு. V. பிரகதீஷ், த/பெ, திரு. வாசுதேவன் R	**சொத்து எண்.01: திரு. வி. பிரகதீஷ், த/பெ, திரு.வாசுதேவன் அவர்களின் சொத்து. விருகம்பாக்கம் சார் பதிவு அலுவலகத்தின் 28.01.2008 தேதியிட்ட விற்பனை பத்திர ஆவண எண்.427/2008.** அடுக்குமாடி குடியிருப்பான யூனியன் நெஸ்ட் அபார்ட்மென்ட்ஸ், பிளாட் எண். F, முதல் தளம், மனை எண்.38 & 39, சரஸ்வதி நகர், 2வது தெரு, நெற்குன்றம், சென்னை– 600092 இல் கட்டுமானப் பரப்பு 494 சதுர அடி அதனுடன் கூட 494/3875 ச.அடியில் உள்ள பிரிக்கப்படாத பங்காகிய சர்வே எண்கள். 122/1 மற்றும் 2, பட்டாவின்படி சர்வே எண்.122/9 இல் உள்ள 2400 ச.அடி உள்ள பரப்பளவு சொத்து, நெற்குன்றம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சொத்து. அதன் எல்லைகள்: வடக்கில்: S.No.122 இல் உள்ள சொத்து, தெற்கில்: S.No.122 இல் உள்ள சொத்து, கிழக்கில்: S.No.122 இல் உள்ள திருமதி.A லீலா அம்மாளுக்குச் சொந்தமான சொத்து, மேற்கில்: 20 அடி அகல சாலை. இந்த சொத்து விருகம்பாக்கம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	அடுக்கு மாடி குடியிருப்பு	ரூ.59,56,903/– (ரூபாய் ஐம்பத்தொன்பது லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து மூன்று மட்டும்)	ரூ. 21,00,000/– (ரூபாய் இருபத்தொரு லட்சம் மட்டும்) ஏல உயர்வுத் தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்)	ரூ.2,10,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	மேலே குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியின் கைபேசி எண்கள் மூலம் பெறப்பட்ட முன் அனுமதியின் பேரில்
தொகுதி 2	M/s. ஹார்ட் சிப்ஸ் எண்டர்பிரைசஸ்/ திரு.V.பிரகதீஷ் /திருமதி. வாசுதேவன் பொன்முடி 13(2) இன் கீழ் கோரிக்கை அறிவிப்பு தேதி 20.04.2022 கையக சுவாதீனம் தேதி 10.02.2026	திரு. V. பிரகதீஷ், த/பெ,திரு. வாசுதேவன் R	**சொத்து எண்.02.** திரு. வி. பிரகதீஷ், த/பெ, திரு.வாசுதேவன் அவர்களின் சொத்து. விருகம்பாக்கம் சார் பதிவு அலுவலகத்தின் 28.01.2008 தேதியிட்ட விற்பனை பத்திர ஆவண எண்.428/2008. முதல் தளத்தில் உள்ள பிளாட் எண். E கொண்ட குடியிருப்பு பிளாட்டின் அனைத்து பகுதிகளும், யூனியன் நெஸ்ட் அபார்ட்மென்ட்ஸ், பிளாட் எண்.38 & 39, சரஸ்வதி நகர், 2வது தெரு, நெற்குன்றம், சென்னை– 600092 இல் கட்டுமானப் பரப்பு 500 சதுர அடி அதனுடன் கூட 500/3875 ச.அடியில் உள்ள பிரிக்கப்படாத பங்காகிய சர்வே எண்கள். 122/1 மற்றும் 2, பட்டாவின்படி சர்வே எண்.122/9 இல் உள்ள 2400 ச.அடி உள்ள பரப்பளவு சொத்து, நெற்குன்றம் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள சொத்து. அதன் எல்லைகள்: வடக்கில்: S.No.122 இல் உள்ள சொத்து, தெற்கில்: S.No.122 இல் உள்ள சொத்து, கிழக்கில்: S.No.122 இல் உள்ள திருமதி.A லீலா அம்மாளுக்குச் சொந்தமான சொத்து, மேற்கில்: 20 அடி அகல சாலை. இந்த சொத்து விருகம்பாக்கம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை தெற்கு பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	அடுக்கு மாடி குடியிருப்பு	ரூ.59,56,903/– (ரூபாய் ஐம்பத்தொன்பது லட்சத்து ஐம்பத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து மூன்று மட்டும்)	ரூ. 21,50,000/– (ரூபாய் இருபத்தொரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஏல உயர்வுத் தொகை ரூ.15,000/– (ரூபாய் பதினைந்து ஆயிரம் மட்டும்)	ரூ.2,15,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்)	மேலே குறிப்பிட்ட அதிகாரப்பூர்வ அதிகாரியின் கைபேசி எண்கள் மூலம் பெறப்பட்ட முன் அனுமதியின் பேரில்

கணக்கு எண்.344905001084, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 06/2021-22 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா (கி), மும்பை, IFSC Code:ICIC0003449

மின்-ஏலம் நாள் & நேரம் — **தொகுதி 1: 20 மே 2026 (புதன்கிழமை) முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.** **தொகுதி 2: 20 மே 2026 (புதன்கிழமை) முற்பகல் 12.00 முதல் நண்பகல் 1.00 வரை.**

ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள்: 18 மே 2026 (திங்கள்கிழமை) பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்: விற்பனை விண்ணப்பத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டு கடனீந்தோரின் (OARPL) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநரின் இணையதளம் அதாவது http://bankauctions.com –ஐ பார்வையிடவும்

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) கீழ் r/w 9(1) விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6), r/w 9(1) மற்றும் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிகளின் கீழ், செலவு & செலவினங்களுடன் சேர்த்து இங்கே மேற்குறிப்பிட்டவாறு நிலுவைத்தொகைகளை செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்கும் அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விறப்னை நடைபெறுவது குறித்து தகவல் அளிக்கும் 30 (முப்பது) நாட்கள் கட்டாய அறிவிப்பும் ஆகும். பணம் செலுத்தத் தவறினால், நிதிச்சொத்துக்களை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் புனரமைத்தல் மற்றும் 16.04.2026 தேதி முதல் கூடுதல் வட்டியுடன் சொத்துகளை மீட்டெடுப்பதற்கான ஆலோசனையுடன் மின்–ஏலத்தின் மூலம் செயல்படுத்தவும் அதிகாரப்பூர்வ அதிகாரி / கடனீட்டு கடனீந்தோரின் தனிவிருப்ப முடிவில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

நாள்: 16.04.2026
இடம்: சென்னை

(V.M.திவாகரன்)
கைபேசி எண். 99623 33307
அதிகாரப்பூர்வ அதிகாரி,
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்,
(ஓம்காரா பிஎஸ் 06/2021-22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)